10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka



# எதிரொலி
## Ethiroli

01 அதிர்வு 320 திங்கட்கிழமை 09 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## சம்பந்தன் அரசின் ஆளா?
# தினேஸுக்கு வந்த சந்தேகம்



கொழும்பு,ஏப்.09

நாடாளுமன்றம் கேலிக் கூடமாக மாறுவதைத் தடுக்க எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கப் போவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வர கூட்டு எதிர்க்கட்சி நடவடிக்கை எடுத்து வருவதாக வெளியாகியுள்ள தகவல்கள் 06▶

# “ஒப்பிரேஷன் சம்பந்தர்”



## பொது எதிரணி தயார்

கொழும்பு, ஏப்ரல் 09

“பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தனது பதவிக்கு எதிராக செயற்பட்டுள்ளார். இது அவர் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்துள்ளமை நிருபணமாகிறது.

எனவே, நாட்டில் கூட்டு எதிரணியினரின் கொள்கைகள் நிலைநாட்டப்பட வேண்டுமாக இருந்தால் முதலில் எதிர்க்கட்சி தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிரணியினர் சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டும்” என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். 06▶

# ஐ.தே.க.வில் ஒருபோதும் இணையேன்



யாழ்ப்பாணம்,ஏப்.09

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளும் எண்ணம் எந்தக் காலத்திலும் தனக்கு ஏற்பட்டதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் போன்றே செயற்பட்டு வருவதாகவும் அவர் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக வருவார் என்று தெற்கில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

இந் நிலையில் யாழ் பிரதான 06▶

# புத்தாண்டுக்கு முன்னர் அமைச்சரவை மாற்றம்!



கொழும்பு,ஏப்.09

சிங்கள, தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் அமைச்சரவையை மறுசீரமைப்பு செய்யத் தீர்மானம் எடுக்கப்பட் 06▶

# டக்ளஸ், ஆறுமுகனுக்கு அமைச்சு பதவி?



கொழும்பு,ஏப்.09

அமைச்சரவை மாற்றத்தின் போது இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் 06▶



# மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கும்?

கொழும்பு,ஏப்.09

புது வருடத்துக்குப் பின்னர் மண்ணெண்ணெயின் விலையை அதிகரிக்க இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் சிந்தித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மண்ணெண்ணெய் உற்பத்தியின் மூலம் கடந்த மூன்று வருடத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 3.5 பில்லியன் ரூபாவை இழந்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் 06▶

# தோல்விக்கு மகிந்தவே பொறுப்பு!



கொழும்பு,ஏப்.09

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்துக்குள் படுதோல்வியடைந்தமைக்கான முழுமையான பொறுப்பையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே ஏற்கவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரை விற்று, தோல்வியை அவரது தோளில் சுமத்தி விட்டு மகிந்த ராஜபக்ச தப்பிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டு வரவில்லை. அப்படியான எந்த யோசனையும் கட்சியின் மத்திய செயற்குழுவில் முன்வைக்கப்படவில்லை. 06▶

# பிரதமரை எதிர்த்தோருக்கு அமைச்சரவையில் “கல்தா”

கொழும்பு,ஏப்.09

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் சிலருக்கு புதிய அமைச்சரவையில் இடம் கிடைக்காது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பழைய,மற்றும் புதிய முகங்கள் அமைச்சரவை 06▶

# அரசிலிருந்து விலகும் சு.க? இன்று முக்கிய கூட்டம்

கொழும்பு,ஏப்.09

தற்போதைய அரசாங்கத்தில் தொடர்ந்திருப்பதா அல்லது வெளியேறுவதா என்பது தொடர்பில் இன்று நடைபெறும் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය
இலங்கை சுதந்திரக் கட்சி
SRI LANKA FREEDOM PARTY

பதவிகளில் இருந்தும் அரசாங்கத்தில் இருந்தும் விலகத் தயார் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த அரசாங்கத்திலுள்ள 16 பேர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள மத்திய குழுக் கூட்டத்தில் தற்போதைய அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சியின் வகிபாகம் என்ன என்பது தொடர்பில் 06▶

# ஜே.வி.பி.யுடன் ஐக்கியமாகும் பொது எதிரணி

கொழும்பு,ஏப்.09

ஜே.வி.பியால் நாடாளுமன்றுக்கு கொண்டு வரப்படவுள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்கும் 20 ஆவது அரசியல் திருத்தத்துக்கு கூட்டு எதிர்க்கட்சி ஆதரவளிக்குமென அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை கலந்துரையாடப்படவில்லை. ஆனால் இந்த 20 ஆவது திருத்த சட்டமூலத்திற்கு கூட்டு எதிர்க்கட்சி ஆதவளிக்குமென தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் 06▶

# ரயிலோடு மோதுண்டு இளம்பெண் படுகாயம்

## மிருசுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.09

மிருசுவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ரயில் கடவையில் பிக்கப் ரக வாகனம் ஒன்று ரயிலுடன் மோதியதில், வாகனத்தில் பயணித்த 19 வயதான யுவதி ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இதில் சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகம் ஜெனா (வயது-19)என்ற யுவதியே படுகாயமடைந்துள்ளார்.

திணைக்களம் ஒன்றுக்குச் சொந்தமான குறித்த பிக்கப் வாகனம், ரயில் கடவையைக் கடக்க முற்பட்டபோது, யாழில் இருந்து கொழும்பு சென்ற ரயிலுடன் எதிர்பாராத விதமாக மோதுண்டது. எனினும் வாகனத்தின் பின்புறமாக ரயில் மோதியதால், வாகனத்தில் சாரதி காயங்கள் ஏதுமின்றி உயிர் தப்பினார். இதே வேளை வாகனத்தின் பின்னால் இருந்த 19 வயதான யுவதி பலத்த காயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# போர்க் கப்பல்கள் இன்று புறப்பாடு



கொழும்பு, ஏப்.09

இலங்கை வந்துள்ள தாய்லாந்துக் கடற்படைக்குச் சொந்தமான மூன்று இராணுவப் பயிற்சி கப்பல்களும் இன்று நாட்டை விட்டு புறப்பட்டுச் செல்லவுள்ளன.

இந்தக் கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை கடந்த வெள்ளிக்கிழமை வந்தடைந்தன. நல்லெண்ண அடிப்படையில் இங்கு வந்துள்ள இந்தக் கப்பல்களை கடற்படை மரபுகளுக்கு அமைவாக இலங்கைக் கடற்படையினர் வரவேற்றனர்.

இக்கப்பலின் கடற்படை பயிற்சி மாணவர்கள் பிரிவின் கட்டளைத் தளபதியும், கப்பலின் அதிகாரியும், மேற்கு பிரிவு கடற்படை தலைமையகத்தில் நிறைவேற்றுக் கட்டளைத்தளபதி ரியல்ட் அட்மிரல் நிசாந்த உலுகேதென்னவைச் நேற்று முன்தினம் சந்தித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து இந்த அதிகாரிகள் கடற்படையின் தலைமையகத்தில் கடற்படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி ரியல்ட் அட்மிரல் நீல் ரொசைரோவை சந்தித்தனர். இதன்போது இரு தரப்புக்கும் முக்கியமான பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தப் கப்பல்கள் இங்கிருக்கும் காலப்பகுதியில் கப்பல்களின் பணியாளர்கள் இலங்கைக் கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டி, கலாசார நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பேஸ்புக் அலுவலகத்தை இலங்கையில் அமைக்குக

## அரசு கோரிக்கை




கொழும்பு, ஏப்.09

பேஸ்புக் நிறுவனத்தின் அலுவலகம் ஒன்றை இலங்கையில் அமைக்குமாறு கோரிக்கை ஒன்று விடுக்கப்படவுள்ளதாக, வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சிங்கள மொழியில் வெளியிடப்படும் சில தகவல்கள் ஊடாக இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தடுப்பதற்காக குறித்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த 4 ஆம் திகதி பேஸ்புக் நிறுவன பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்படவிருந்தது. ஆயினும் பின்னர் அது நடைபெறவில்லையென்றும், எனினும் அவ்வாறான கலந்துரையாடல் முன்னெடுக்கப்படும் போது, இலங்கையில் பேஸ்புக் நிறுவனத்தின் அலுவலகத்தை திறப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று ஜனாதிபதியின் செயலாளரும், தொலைத் தொடர்புகள் ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளருமான ஒஸ்டின் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பேஸ்புக்கின் அலுவலகம் ஒன்றைத் திறந்து, அதில் இலங்கையர்களையும் பணியாளர்களாக இணைத்துக்கொண்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# சாதாரண தர பெறுபேறு மீளாய்வு நீடிப்பு

கொழும்பு, ஏப்.09

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்வி பொதுதராதர சாதாரண தரப்பரீட்சையின்பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகள்தமது மீளாய்வு விண்ணப்பங்களை ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வரை அனுப்பலாம் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்த போதிலும், எதிர்வரும் 12 ஆம்திகதி வரை இது நீடிக்கப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் திணைக்களப் பதில் ஆணையாளர் ஜெனரல் சனத் பூஜித தெரிவீத்துள்ளார். (அ)

# படையதிகாரி சடலமாக மீட்பு

கொழும்பு, ஏப்.09

கலா வாவியில் மிதந்து கொண்டிருந்த நிலையில் இராணுவ அதிகாரி ஒருவரின் சடலமொன்று சாலியவெவ பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரதேசவாசிகளால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் நீலபெம்ம பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய இராணுவ அதிகாரி எனத் தெரியவந்துள்ளது.

இவர் கடந்த 5 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி பொலிஸ் முறைப்பாடு செய்துள்ள நிலையில், இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கலா வாவியில் மீன்பிடி வலையில் குறித்த நபரின் சடலம் சிக்கி காணப்பட்ட நிலையில் பொலிஸாக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் இவர் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. சடலம் புத்தளம் மேலதிக நீதவானின் உத்தரவுக்கு அமைய பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (அ)

# கொத்மலையில் கனமழை: வான்கதவு நேற்றுத் திறப்பு



கொழும்பு, ஏப்.09

மலையகத்தில் நேற்று முன்தினம் மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரை பெய்த அடைமழை காரணமாக மேல் கொத்மலை மின்சார சபைக்கு நீரேந்தும் பகுதியில் ஆற்று நீரின் மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதனால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று நேற்றுத் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால், அணைக்கட்டுக்கு கீழ்ப் பகுதியில் ஆற்றை பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நீண்டநாள் வறட்சியின் பின் நீரேந்தும் பிரதேசங்களுக்கு கன மழை பெய்ததனால் ஒரு சில நீர்தேக்கங்களின் நீர் மட்டம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

குறிப்பாக கெனியன், லக்ஸபான, விமலசுரேந்திர, மவுஸ்ஸாக்கலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# போதைப் பொருள் விற்றவர்கள் கைது

கொழும்பு, ஏப். 09

கேரளக் கஞ்சா மற்றும் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை தலைமைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மரத்தடிச்சந்தியில் 52 கிராம் கேரளக் கஞ்சாவுடன் 27 வயது இளைஞர் ஒருவரையும் மீன்சந்தை அருகே 14 மில்லிகிராம் ஹெரோயினுடன் 51 வயதுடைய முதியவரையும் திருகோணமலை மாவட்ட விஷத்தன்மையுடைய போதைபொருள் ஒழிப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் நீண்டகாலமாக போதைபொருள் விற்பனையில் ஈடுபடுவதாக அவர்கள் தெரிவித்தனர். மேலும் கைதுசெய்யப்பட்ட 51 வயதுடைய நபர் மீது 7 வழக்குகள் இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் தலைமை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தேசிய புத்தரிசி விழாவில் மைத்திரி பங்கேற்பு



கொழும்பு, ஏப்.09

நாட்டின் மாபெரும் விவசாய விழாவான 'தேசிய புத்தரிசி விழா' ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பிரசித்திபெற்ற ஜயஸ்ரீ மகா போதியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

சம்பிரதாயபூர்வமாக சிறுபோகத்தின்போது அறுவடை செய்யப்பட்ட அரிசியை ஜயஸ்ரீ மகா போதிக்கு தானம் செய்யும் இந்த விழா, அடமஸ்தானாதிபதி சங்கைக்குரிய பல்லேகம சிறினிவாச நாயக்க தேரரின் ஆசிர்வாதத்துடன் விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தினூடாக 51ஆவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மன்னர் ஆட்சிகாலம் முதல் இடம்பெற்றுவரும் இந்த நிகழ்ச்சியில் நாடு முழுவதும் உள்ள பெருமளவு விவசாயிகள் கலந்துகொண்டதுடன், உரிய காலத்தில் மழை கிடைக்கவும் நாடு விவசாயத்துறையில் செழித்து விளங்கவும் விவசாயத் துறையில் நாடு தன்னிறைவடைந்து சுபீட்சமான பொருளாதாரம் கிடைக்கவும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லாசி வேண்டியும் பிரார்த்தனை இடம்பெற்றது.

நச்சுத்தன்மையற்ற உள்நாட்டு அரிசிப் பாத்திரம் ஜனாதிபதியால் பாரம்பரிய முறைப்படி மகா சங்கத்தினருக்கு பூஜை செய்யப்பட்டது.

வேடர்கள் தலைவர் ஊறுவரிகே வன்னிலா எத்தனோவினால் சம்பிரதாயபூர்வமாக ஜயஸ்ரீ மகா போதிக்கு தேன் பூஜைக்கான தேன் பாத்திரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. (அ)

எதிரொலி Ethiroli
திங்கள், 09 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

## இன்னொரு பிரேரணை?

ரணில் மீது மையம் கொண்டிருந்த பொது எதிரணியின் பார்வை இப்போது முழுதுமாக எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மீது திரும்பியிருக்கிறது. ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிச்சயமாக வெற்றி பெறும் என்ற பொது எதிரணியின் கனவில் மண்ணள்ளிப் போட்டவர் சம்பந்தனும், அவரது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமே என்ற கடுப்பே இத்தனைக்கும் காரணம்.

ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி என்று எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும்,கொடுப்பதைக் கொடுத்து வளைத்துப் போட்டு, ரணிலை எப்படியாவது வீட்டுக்கு அனுப்பும் வேலையில் மகிந்த விசுவாசிகள் முனைப்பாக ஈடுபட்டிருந்தனர். இவர்களின் தூண்டிலில் பல எம்.பிக்கள் சிக்குண்டார்கள். இன்னும் சிலர் தாமாகவே வந்து மகிந்த அணியின் தூண்டிலில் தலையைக் கொடுத்தார்கள். உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன பெரமுன போட்டியிட்ட இடமெல்லாம் வாகை சூடியதால், அடுத்த முறை மகிந்த தலைமையிலான அணியே ஆட்சியமைக்கப் போகின்றது என்ற எதிர்பார்ப்பு பல அரசியல்வாதிகளின் மனதில் ஆழப்பதிந்துவிட்டது. எனவே இப்போதே மகிந்த அணியில் இடம்பிடித்தால் தான், அடுத்த தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்டு, அதிகாரத்தோடு வலம் வரலாம். அதற்காக மகிந்தவின் கரங்களை வலிந்து பலப்படுத்தும் வேலைகளையும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் இப்போதே செய்யத் தொடங்கிவிட்டார்கள். எவ்வளவு விரைவாக புதிய அரசை நிறுவ முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்வதற்கான எல்லா வழிகளையும் 'ரூம்' போட்டு யோசித்து திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றில் ஒன்றுதான் பிரதமர் ரணில் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை.


தமிழ் சினிமாப் படங்களில் கடைசி நேரத்தில் வந்து நாயகியை மீட்கும் நாயகன் போல, ரணிலை நம்பிக்கையில்லாப் பிரேரணையின் கடைசிக் கட்டத்தில் காப்பாற்றியிருந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் வெறும் 16 தானே, ஆனால் ரணில் மேலதிகமாக 44 வாக்குகளால் தானே வென்றார். அப்படியானால் கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவாக, பிரேரணையை எதிர்த்து வாக்களிக்காது விட்டிருந்தாலும் அவர் வென்றிருப்பார் தானே" என்ற கேள்வி இவ்விடத்தில் தர்க்கபூர்வமாக எழுப்பப்படலாம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றது என்று தெரிந்தவுடன் தான், மனோகணேசனும், முஸ்லிம் காங்கிரஸூம், ரிஷாட் பதியூதீனும் அதே முடிவுக்கு வந்தார்கள். இ.தொ.கவும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் இருக்க தீர்மானித்தது. இது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த ரணில் எதிர்ப்பாளர்களுக்கு சிக்கலாகிப் போனது. சிறுபான்மைக் கட்சிகள் ஆதரவளித்தால் நிச்சயமாகப் பிரேரணை வெற்றி பெற முடியாது. இப்படிப்பட்ட நிலையில் ரணிலுக்கு எதிராக வாக்களித்தால் இருக்கின்ற இடமும் பறிபோய்விடும் என்பதால், பேசாமல் நாமும் ரணிலுக்கு ஆதரவாக வாக்களிப்போம் என்று கடைசி நேரத்தில் மனதை மாற்றிக் கொண்டார்கள். இந்த விடயம் மகிந்தவுக்கும் இரகசியமாகத் தெரியப்படுத்தப்பட்டது. அவரும் "சரி, இந்த நிலையில் ரணிலுக்கு ஆதரவாக வாக்களிப்பதே உங்களுக்கும் நல்லது. தருணம் வரும்வரை பொறுத்திருங்கள்" என பதிலளித்துள்ளார். அதன் பின்னரே 44 வாக்குகளால் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

ஆகவே, பிரேரணையின் தோல்விக்கு மூலகாரணம் கூட்டமைப்பும், அதன் வழியில் பின் தொடர்ந்த சிறுபான்மைக் கட்சிகளுமே. அப்படிப் பார்த்தால், இரண்டாவது தடவையாக மகிந்த சிறுபான்மையினரால், குறிப்பாகக் கூட்டமைப்பினால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்.

எனவேதான் சம்பந்தரை எதிர்க்கட்சித் தலைமைப் பதவியில் இருந்து இறக்கி, கூட்டமைப்பு மீதான தன் வன்மத்தைத் தீர்த்துக் கொள்ள மகிந்தவும், அவரின் பொது எதிரணியும் கொடுக்குக் கட்டிக் கொண்டு, சம்பந்தருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முயல்கிறார்கள். எத்தனை தரம் வெட்டி வீழ்த்தினாலும் வேதாளம் (மகிந்த அணி) முருங்கை மரத்தில் ஏறுவேன் என்று அடம்பிடித்தால், விக்கிரமாதித்தன் (கூட்டமைப்பு) என்னதான் செய்ய முடியும்?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசுக்கு இரண்டாவது வாய்ப்பு



திருகோணமலை, ஏப். 09

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியடைந்ததன் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசுக்கு தற்போது இரண்டாவது வாய்ப்புக் கிடைத்துள்ளது என தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட சர்வமத பேரவை உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் செயலமர்வில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

ஹபறணை விலேஜ் விடுதியில் நேற்றையதினம் இந்த செயலமர்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு குறிப்பிட்ட ஒரு சில பணிகளை நிறைவேற்றுவதற்காகத் தான் இந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி பீடமேறியது.

ஆனால் 2015ஆம் ஆண்டு தொடக்கம் அந்தப் பணிகள் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெற்று வந்துள்ளதோடு அரசாங்கம் பின்வாங்கும் நிலையும் காணப்பட்டது.

அதற்கான காரணம் நல்லாட்சி அரசாங்கத்திற்குள்ளே காணப்பட்ட பிளவாகும்.

நல்லாட்சியிலுள்ள இரண்டு கட்சிகளுக்கிடையிலும் பிளவு காணப்படுகின். அதேவேளை, தற்போது மக்கள் மத்தியிலும் பிளவு காணப்படுகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் வெற்றி பெற்றுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியினர் வலுவடைந்துள்ளனர். ஐ.தே.க அந்தக் குழுவினர்தான் பொருளாதாரத்திலும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதிலும் முன்னணியில் இருக்கும் குழுவினராகும்.

ஆகவே அதுவொரு நல்ல சகுனமாகத்தான் எனக்குப் படுகின்றது.

2015-இல் நாட்டில் சிறுபான்மை, பெரும்பான்மை மக்களிடையே ஒற்றுமை ஏற்பட்டிருந்தது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது சிறுபான்மை கட்சிப் பிரதிநிதிகளும் ஐ.தே.க பிரதிநிதிகளும் இணைந்து வாக்களித்திருந்தார்கள்.

உயர்மட்டத்தில் காணப்பட்ட அந்த ஐக்கியம் மக்கள் மத்தியில் காணப்படவில்லை. ஒட்டுமொத்த இலங்கையிலுமுள்ள பிரச்சினை அதுதான். இலங்கை பன்முகத்தன்மை கொண்ட நாடு. இலங்கையில் இனங்களுக்கிடையில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றிருக்க முடியாது.

முதலாந்தரப் பிரஜைகள் என்று ஒரு சாரார் இருக்க, இரண்டாந்தர பிரஜைகளாக ஒரு சிலர் இருக்க முடியாது.

எல்லோரும் சமமானவர்கள். அவர்கள் ஒரே விதத்தில் பராமரிக்கப்பட வேண்டும் என்பதில் நாட்டில் பதற்ற நிலைமை காணப்படுகின்றது.

இலங்கை என்பது ஒரு தாய் மக்கள் நிறைந்த குடும்பம் போன்றது. சமயப் போதனைகளும் அவைதான். இவ்வாறேதான் நாடும் உலகும் நிருவகிக்கப்பட வேண்டும். ஆனால் யதார்த்தம் அவ்வாறில்லை.

பல்லினத் தன்மையில் சம அந்தஸ்து வழங்கப்படாவிட்டால் எமது நாடு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும். அம்பாறை, கண்டி சம்பவங்கள் இதனை நமக்குணர்த்தி நிற்கின்றன.

பெரும்பான்மை இன மக்களுக்கு எதிராக எதனையும் செய்யக் கூடாது என்ற அச்சம் அரசுக்கு இருந்தது.

கண்டி சிவில் சமூகம் வலிமை அதிகாரம் இல்லாத சந்தர்ப்பத்திலும் குறியீட்டு ரீதியிலான வல்லமையை வைத்துக் கொண்டு கலவர நேரத்தில் அவர்கள் செயற்பட்டார்கள்.

இங்கு நடந்தது தவறு என்று அவர்கள் ஊடக மாநாட்டில் வெளிப்படையாக எடுத்துச் சொன்னார்கள்.

மக்கள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு உருவாக்கப்பட வேண்டும் என்று கண்டியில் கோரி நின்றார்கள்.

அதேபோல நாட்டிலுள்ள ஏனைய சிவில் சமூகங்களும் இதனைச் செய்ய வேண்டும். வன்முறைக்கு தயாரில்லை சட்டத்தின் ஆட்சி நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

திருகோணமலை மட்டக்களப்பிலும் இனப்பிரச்சினைகள் உள்ளன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கூடாக சிவில் சமூகம் எங்கும் செயற்பட வேண்டும். தனியாகச் சிந்திக்காமல் சிவில் சமூகமாகச் சேர்ந்து சிந்திக்க வேண்டும். ஆண், பெண் சமூகம் என்று சிந்தனை பரஸ்பர உரையாடலுக்குச் செல்ல வேண்டும்.

இலங்கையில் பரஸ்பர உறவுமில்லை கலந்துரையாடலுமில்லை. சிவில் சமூகம் தயாராக இருந்தால் அரசை சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தூண்டலாம்.' என்றார்.

## எதிர்க்கட்சியில் மாற்றம்: கூட்டு எதிரணி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 09

எதிர்வரும் நாட்களில் அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படக்கூடும் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியினரும், எதிர்க்கட்சி தலைவரும் மக்கள் ஆணையை பிரதிபலிக்கும் வகையில் செயற்படுவதில்லை.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையின் போது பல நிபந்தனைகளை முன்வைத்து பிரதமருக்கு ஆதரவாக எதிர்கட்சித் தலைவர் உள்ளிட்ட குழுவினர் செயற்பட்டதனூடாக இந்த விடயம் புலப்படுகிறது.

இதன்காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் அடுத்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது கலந்தாலோசித்து பாரிய மாற்றங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




## பதவி விலகினார் மலிக் சமரவிக்கிரம



கொழும்பு,ஏப்.09

ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரான அமைச்சர் மலிக் சமரவிக்கிரம பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளார்.

தான் இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## இன்று நாளும் கோளும்

09.04.2018 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 26 ஆம் நாள்

நவமி மு.ப. 04.24 வரை | உத்திராடம் பி.ப. 08.31 வரை | குளிகை 01.30-03.00

இராகுகாலம் 7.30.- 09.00 | சுபநேரம் காலை 06.30 - 07.30 | எமகண்டம் காலை 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நலம் | பெருமை | மறதி | ஓய்வு | கோபம் | பணிவு | போட்டி | சாந்தம் | நிம்மதி | உயர்வு | தடங்கல் | நன்மை |



# ஈ.பி.ஆர்.எல்.எவ் வந்தால் மீண்டும் இணைப்போம்

## சுமந்திரன் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியுள்ள, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) மீளவும் கூட்டமைப்புடன் இணைய விரும்பினால், அது குறித்துச் சாதகமாகப் பரிசீலிக்க கூட்டமைப்பு தயார் என்று அந்தக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ் பிரதான வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் காலத்துக்கு காலம் வெவ்வேறு கட்சிகள் வந்து சேர்ந்திருக்கின்றன. அதே போன்று காலத்துக்கு காலம் கட்சிகள் வெளியேறியும் போயிருக்கின்றன. ஆனால் எந்தக் கட்சியையும் வெளியேறுமாறு எந்தக் காலத்திலும் நாம் சொன்னது கிடையாது.

அவர்கள் தாங்களாகவே வெளியேறிப் போயிருக்கின்றார்கள். அவ்வாறு போகின்றவர்களை நாங்கள் தடுத்து நிறுத்தியதும் கிடையாது. ஆகவே வெளியேறிப் போனவர்கள் வர வேண்டுமென்று விரும்பினால் அதனைச் சாதகமாகப் பரிசீலிப்பதற்கு நாங்கள் தயார்" என்று அவர் தெரிவித்தார். (அ)



# தனித்து மே தினப் பேரணியை நடத்தவுள்ள 16 பேர்

கொழும்பு,ஏப்.09

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சியின் 16 பேரும் எதிர்வரும் மேதினப் பேரணியைத் தனியாக நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்,

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ரி.பி ஏக்கநாயக்க தெரிவிக்கையில்,

"சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள ரணில் ஆதரவாளர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட மே தினப் பேரணியில் நாம் கலந்து கொள்ளமாட்டோம்.இதனை ஒழுங்கு செய்தவர்கள் ரணிலின் ஆதரவாளர்களே. குறிப்பாக மகிந்த அமரவீர, துமிந்த திஸநாயக்க இருவரும் ரணிலின் ஆதரவாளர்கள்.

நாங்கள் 16 பேரும் ஒழுங்கு செய்துள்ள மே தினப் பேரணி எதிர்வரும் 07 ஆம் திகதி விகாரமாதேவி பூங்காவில் நடைபெறவுள்ளது.இதற்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபாலவை அழைக்கவுள்ளோம். அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் அழைக்கவுள்ளோம்" எனவும் தெரிவித்தார்.

தயாசிறி ஜயசேகர, எஸ்.பி. திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, அனுரபிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, ஜோன் செனவிரத்ன ஆகிய 6 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களான டிலான் பெரேரா, டி.பி. ஏக்கநாயக்க, லக்ஷ்மன் யாப்ப அபேவர்தன, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, பிரதியமைச்சர்களான சுசந்த புஞ்சிநிலமே, அனுருத்த ஜயரத்ன, சுமேதா ஜீ. ஜயசேன, லக்ஷ்மன் வசந்த, தாராநாத் பஸ்நாயக்க மற்றும் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோரே பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டவிரோத மீன்பிடி: இருவர் கைதாகினர்



முல்லைத்தீவு, ஏப்.09

முல்லைத்தீவு நந்திக்கடல் களப்பு பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடிக்காக அவர்கள் பயன்படுத்திய உபகரணங்களும், பிடிக்கப்பட்ட மீன்களும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட மீனவர்கள் இருவரையும் முல்லைத்தீவு பொலிஸாரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# சமுர்த்தி உற்பத்திக்கு 50 மாதிரிக் கிராமங்கள்

கொழும்பு, ஏப். 09

இலங்கையில் நாடளாவிய ரீதியில் 50 சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமங்களை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

குறித்த திட்டத்தினை மேற்கொள்வதற்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு மாவட்டத்தில் இரண்டு சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமம் என்ற அடிப்படையில் 25 மாவட்டங்களில் ஏற்படுத்தப்படவுள்ளன.

இந்தத்திட்டத்தின் ஊடாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித் திட்டம், சிறிய நடுத்தர சுயதொழில் ஆகியன முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# கரையோரங்களில் கடுங்காற்று வீசும்

கொழும்பு, ஏப். 09

நாட்டின் கரையோரப் பகுதிகளில் பலமான காற்று வீசக்கூடும் எனவும், இதனால், அலையின் வேகமும் அதிகமாக இருக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு இன்று மழை எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

குறிப்பாக, நாட்டின் கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தெற்கு ஆகிய பிரதேசங்களின் கரையோரப் பகுதிகளுக்கு கூடிய மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

காலி முதல் அம்பாந்தோட்டை வரையிலும், மட்டக்களப்பு ஊடாக திருகோணமலை வரையிலும் உள்ள கரையோரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் ஏனைய கரையோரப் பகுதிகளிலும் மாலை வேளையிலும், இரவிலும் இடைக்கிடை மழை பெய்யும் சாத்தியக் கூறுகள் உள்ளன எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# புதையல் தோண்டிய மூவர் கைது

கொழும்பு, ஏப்.09

கேகாலை, குரந்துகின்ன பகுதியில் உள்ள வீடொன்றில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கேகாலை குற்ற தடுப்பு விசாரணைப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# மே மாதத்தில் புதிய இலங்கை



கொழும்பு, ஏப்.09

கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் ஏற்பட்ட புவியியல் மாற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியவாறு அமைக்கப்பட்ட இலங்கையின் புதிய வரைபடம் மே மாதம் வெளியிட்டு வைக்கப்படுமென நில அளவையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் ப்ணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாகவும், அதனை அச்சிடுவதற்கான வேலைகள் எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்படுமெனவும், நில அளவையாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் பீ.என்.பீ. உதயகாந்த தெரிவித்துள்ளார். (அ)

# சிங்கள நடிகை காலமானார்



கொழும்பு, ஏப்.09

பிரபல சிங்கள நடிகையும், பின்னணிக் குரல் கலைஞருமான ரத்னாவலி கெகுணவெல தனது 87 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

அவரது உடல் ரத்மலானவில் உள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அவரது இறுதிக் கிரியைகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

1951 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி வானொலி நாடமொன்றில் பின்னணிக் குரல் கலைஞராக கலைத்துறைக்குள் பிரவேசித்த இவர், பிரபல வானொலி நாடகமான "முவன் பெலஸ்ஸே மெனிகே" என்ற நாடகத்தின் பெயர் கொண்டு செல்லமாக அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கட்டடம் இடிந்து இருவர் காயம்



கொழும்பு, ஏப்.09

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்குப் பின்னால் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த மூன்று மாடிகளைக் கொண்ட தனியார் வர்த்தகக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில், இருவர் காயமடைந்தனர்.

அந்தக் கட்டடத்தின் மூன்றாம் மாடிக்கு நேற்று முன்தினம் கொங்கிரீட் இட்டுக் கொண்டிருக்கும் போதே அதன் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பூநகரி பிரதேச வைத்திய அதிகாரியின் வாகனம் விபத்து



பூநகரி, ஏப். 09

பூநகரி பிரதேச வைத்தியசாலை மருத்துவ அதிகாரியின் வாகனம் விபத்துக்குள்ளானதில் மருத்துவ அதிகாரியின்தாயார்படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது கிளிநொச்சி பூநகரி வீதியில் குடமுருட்டி பாலத்துக்கு அருகில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் பூநகரி பிரதேச வைத்தியசாலை மருத்துவ அதிகாரியின் சகோதரன் சிறு காயங்களுக்குள்ளானார். எனினும் மருத்துவ அதிகாரியின் தாயார் படுகாயமடைந்த நிலையில் வீதியால் சென்றவர்களால்மீட்கப்பட்டு, பிரதேச வைத்தியாசலையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## துமிந்த, மகிந்தவை
# நீக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப். 09

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிப்பதென கூட்டாக இணைந்து எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு புறம்பாக செயற்பட்டமையால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர ஆகியோரைப் பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், ஜனாதிபதியிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேரில் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சுசில் பிரேமஜயந்த, சுசந்த புஞ்சி நிலமே, ஜோன் செனவிரட்ன உள்ளிட்டவர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

குறித்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கெதிரான வாக்கெடுப்பில் மேற்படி இருவரும் பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)



# ஆரேன் ஒருத்தன் வருவன்தானே, தட்டிக் கேக்க!!!

உலகம் எப்பிடி எப்பிடி எல்லாம் போகுதெண்டதை வடிவாப்பார் முதலி. பழைய ஆக்கள் மாத்திரமில்லை இப்ப சூட்டோடை சூடா அரசியலுக்கை வந்தவையளும் பிரட்டிப் பிரட்டிச் சந்தர் பத்துக்கு ஏற்ற மாதிரிக் கதைக்கத் துவங்கிவிட்டினம். அரசியலுக்கை வந்திட்டால் அப்பிடித்தான் கதைக்க வேணுமோ? இல்லாட்டி மனச்சாட்சியே இல்லாமல் கதைச்சால்தான் அரசியலோ? எனக்கு ஒண்டும் விளங்கேல்லை. படு கேவலாமாப் போச்சுது.

நான் ரஜனிகாந்த் நடிகரைத்தான் சொல்லுறன். அவ்வளவு காலமும் உயிரோடை தமிழ் நாட்டிலைதானே இருந்தவர். இப்ப என்ன புதுசாத் இலங்கைத் தமிழ் அகதியளிலை ஒரு கரிசனை வந்திட்டுது. இப்ப சொல்லுறார் இலங்கைத் தமிழ் அகதியளுக்குக் குடியுரிமை குடுக்க வேணுமாம். குடுக்கத்தான் வேணும். ஆனால் குடுப்பினமோ?

இலங்கையிலை அமளிச் சண்டை நடக்கேக்கை உவரும் தமிழ் நாட்டிலை பால் குடிச்சுக் கொண்டு படுத்திருந்தவர் தானே? அப்ப வாய் திறந்து ஒரு சொல்லுச் சொல்லாத மனுசன் இப்ப இலங்கைத் தமிழ் அகதியளுக்காகக் கண்ணீர் வடிக்கிறார் எண்டால்? எனக்கு ஓநாயின்ரை கதைதான் ஞாபகத்துக்கு வருகிது. ஆடு நனையிதெண்டு ஓநாய் என்ன செய்துதாம்? அழுததாம். ஏன் அழுததாம்? ஆடு நனையிதெண்டு. ஏன் ஆடு நனைஞ்சது? போகப் போக்கிடமில்லாமல் சிரிப்புத்தான் வருகுதையா.

எட இலங்கைத் தமிழ் அகதியளிலை இவ்வளவு அக்கறை உள்ள மனுசன் எண்டால் நான் உவரைப் பாத்துக் கேக்கிறன் 'இதுவரை எத்தினை அகதி முகாமைப் போய் நீ பாத்திருப்பாய்? உன்னட்டை இருக்கிற காசுக்கு ஒண்டிரண்டு அகதிப் பிள்ளையளைத் தன்னும் படிப்பிச்சிருக்கலாம். இப்ப இருந்திட்டு 'தமிழர் தமிழர் என்று சொல்லுறாங்க. என்ன இவங்க?" எண்டு தமிழ் பட வசனம் பேசி இருக்கிறாய்.'

நடிகர் எண்டு சிவகுமாற்றை பெடியும் இருக்குது தானே? அவன் மனுசன். அவன்ரை அகரம் அமைப்பாலை எத்தினை பிள்ளையள் படிக்கினம். கல்லுடைக்கிற இலங்கைத் தமிழ் அகதி ஒராளின்ரை பிள்ளையை டாக்குத்தருக்கு அவர் படிப்பிக்கிறார். அது மாதிரி எத்தினைபேரை அந்தாள் படிப்புக்கிது. அந்தாள் சின்னப் பெடியனாயிருந்தாலும் மனுசத்தன்மை உள்ள ஆள். என்ன?

படத்திலை பேசுற மாதிரி வீர வசனம் பேசி வேலை இல்லை. ரஜனிகாந்த் பெரிய படத்தைக் கண்ணாலை கண்டது இலங்கைத் தமிழராலைதானே! இப்பவும் இலங்கைத் தமிழ் ஆக்களின்ரை வாலை பிடிச்சுத் தொங்கிற ஆள் வடிவா அகதியளுக்கு உதவி செய்யலாம். இலங்கைத் தமிழ் ஆக்களாலைதானே தென்னிந்தியத் தமிழ் படங்களுக்கு உலக மாக்கற் வந்தது. அதை யாரும் இல்லை எண்டு சொல்லேலாது. ஆனால் அந்த ஆள் இதுவரை ஒண்டும் செய்யாமல் இருந்த ஆள் இப்ப போய்...?

இப்ப அரசியலுக்கை வந்த உடனைதான் இலங்கைத் தமிழ் ஆக்களைத் தேவைப்படுகிது. எல்லாருக்கும் இலங்கைத் தமிழன் கருவேப்பிலை மாதிரிப் போவிட்டான் போலை கிடக்கு. இதுவரைக்கும் இலங்கைத் தமிழ் ஆக்களை வைச்சுத் தலையிலை மிளகாய் அரைச்சது காணும். இனி வேண்டாம் அந்த விளையாட்டு. நீங்கள் உங்கடை அலுவலைப்பாருங்கோ. இலங்கைத் தமிழ் அகதியள் அவையின்ரை அலுவலைப் பாப்பினம்.

இலங்கையிலைதான் தமிழ் ஆக்களை வைச்சு அரசியலும் பேக்காட்டலும் எண்டால்? உலகமெங்கும் தமிழ் ஆக்களை வைச்சு அந்த விளையாட்டுத்தான் நடக்கிது என்ன? உதைக் கேக்க ஒருதரும் இல்லையோ? பொறுத்திருந்து பாப்பம். எங்கினையும் இருந்து ஆரேன் ஒருத்தன் வருவன்தானே உதைத் தட்டிக் கேக்க!!

- வில்லங்கம் விநாசி

# மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

நுவரெலியா, ஏப்.09

நுவரெலியாவில், வசந்த காலத்தை முன்னிட்டு வருடந்தோறும் நடைபெறும் மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இலங்கை மோட்டார் ஓட்டச் சங்கம் மற்றும் நுவரெலியா மோட்டார்ஓட்டக்கழகம்ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு பார்வையாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# சாரதி அனுமதிப் பத்திர பரீட்சை டிஜிட்டல் முறையில்

கொழும்பு,ஏப்.09


வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக பரீட்சார்த்திகள் முகம்கொடுக்கும் எழுத்து மூலப் பரீட்சையை இனிமேல் டிஜிட்டல் முறைமையின் கீழ் நடத்துவதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்தப் புதிய நடவடிக்கை எதிர் வரும் மே மாதம் முதல் அமுலுக்கு வரும் என திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி அறிவித்துள்ளார்.

ஆரம்பக் கட்டமாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் வேரஹர காரியாலயத்தில் இந்தப் புதிய முறைமையை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 150 பேர் இந்தப்பரீட்சைக்கு முகம் கொடுக்க முடியுமான வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சை மோசடிகளைத் தவிர்த்தல், பரீட்சைப் பெறுபேறுகளை விரைவாக வெளியிடல்என்பன இந்தப் புதிய டிஜிட்டல் முறைமையின் கீழ் சாத்தியமாகும் என்று ஆணையாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார். (அ)

# வதிரி முன்பள்ளி விளையாட்டு விழா







வடமராட்சி,ஏப்.09

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட, வதிரி முன்பள்ளி விளையாட்டு விழா உல்லியனொல்லை ஆலய முன்றலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெற்றது. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் அருணகிரி வினோராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரன், சிறப்பு விருந்தினராக கந்தர் பொன்னையா ஆகியோர் கலந்து கொண்டு, வெற்றியீட்டிய முன்பள்ளி மாணவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்தனர். (அ-11)

# தலைவர்களை காலம் விரைவில் அடையாளம் காட்டும்

யாழ்ப்பாணம்,ஏப்.09

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் அஞ்சல் ஓட்டம் போன்றது. எமது தலைவர்கள் பலர் அதைக் கைவிட்டாலும் அதைக் கையில் எடுத்து அடுத்த கட்டத்துக்குப் பயணிக்க எம்மிடம் எவரும் இல்லாமல் போகவில்லை. காலம் விரைவில் அடையாளம் காட்டும்.


இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் வட மாகாண விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

அடுத்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு களமிறக்காது என அந்தக் கட்சியின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஐங்கரநேசன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கொக்குவில் நேதாஜி சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நிலைய முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது

விடுதலை அரசியலுக்கும் தேர்தல் அரசியலுக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளன. விடுதலை அரசியலில் இலட்சியத்துக்காகப் போராளிகள் உயிர்துறக்கவும் தயங்கமாட்டார்கள். ஆனால், தேர்தல் அரசியலில் அரசியல்வாதிகள் நாற்காலிகளுக்காக இலட்சியங்களைக் குழிதோண்டிப் புதைக்கவும் தயங்கமாட்டார்கள்.

எவ்வளவுதான் ஆழக்குழிதோண்டிப் புதைத்தாலும் நியாயமான இலட்சியங்கள் ஒருபோதும் சாவதில்லை.

ஆயுதரீதியாக முன்னெடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் பல அரசியல்வாதிகள் தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து வழுவ ஆரம்பித்துவிட்டார்கள். தாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மறந்து, வதைபட்ட மக்களின் எதிர்பார்ப்புகளை எல்லாம் புறந்தள்ளி இலங்கைத் தேசியத்துக்குள் கரைய ஆரம்பித்துவிட்டார்கள்.

நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பலர் இலட்சியங்களைக் கைவிட ஆரம்பித்துவிட்டார்கள் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.

எமது தலைவர்கள் நேற்றுவரை எவரையெல்லாம் துரோகிகளாக விமர்சித்தார்களோ இன்று ஆசனத்துக்காக அவர்களுடன் கூட்டுவைக்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

விடுதலைப் போராளிகளை அழிப்பதற்கு இராணுவத்துக்குத் துணைபோனவர்களுடன் கூட்டு. வடக்கில் ஆயிரம் விகாரைகளை அமைப்போம் என்று தேர்தல் அறிக்கையில் கூறிய யானைச் சின்னக்காரர்களுடன் கூட்டு. காணாமற்போனவர்கள் பற்றித் தன்னால் இனி எதுவும் தெரிவிக்க இயலாது என்று ஜனாதிபதி கைவிரித்த பின்புங்கூட கைச் சின்னக்காரர்களுடன் கூட்டு. இவற்றையெல்லாம் பார்த்து மக்கள் குழம்பிப்போய் நிற்க, எமது தலைவர்களோ இவற்றைத் தங்களது அரசியல் சாணக்கியம் என்று வியாக்கியானம் செய்கிறார்கள்.

சனசமூக நிலையங்கள் எந்த அரசியல்வாதிகளிடம் இருந்தும், எந்தக் கட்சிக்காரர்களிடம் இருந்தும் அபிவிருத்திக்காக நிதியைப் பெறுவதில் தவறேதும் இல்லை. இந்த நிதி அரசியல்வாதிகளினதோ, அரசியல் கட்சிகளினதோ சொந்தப்பணமல்ல. மக்கள் செலுத்தும் வரிப்பணமே மீளவும் உங்கள் கைக்கு வந்துசேருகிறது. ஆனால், கைநீட்டிக் காசு வாங்கிவிட்டோமே என்பதற்காக அரசியலில் அவர்கள் எல்லோருக்கும் நீங்கள் விசுவாசமாக வாக்களிக்கவேண்டிய அவசியமில்லை. அவ்வாறு செய்யவும் கூடாது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் அஞ்சல் ஓட்டம் போன்றது. எமது தலைவர்கள் பலர் அதைக் கைவிட்டாலும் அதைக் கையில் எடுத்து அடுத்த கட்டத்துக்குப் பயணிக்க எம்மிடம் எவரும் இல்லாமல் போகவில்லை. காலம் விரைவில் அடையாளம் காட்டும். அரசு திட்டமிட்டு ஏற்படுத்திவரும் சாதி, சமயப் பிளவுகளுக்குள் சிக்கி நாம் சிதறுண்டுபோகாமல் நாம் எல்லோரும் தமிழர்கள் என்று தமிழ்த் தேசியர்களாக ஒன்றுபட்டு நின்றால் எமது இலட்சியத்தை நாம் அடைந்தே தீரலாம் என்றார்.

## தொடர்ச்சிகள்

### ஐ.தே.க.வில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியிலுள்ள சுமந்திரனின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்படி கருத்து தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற நான் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவேனோ என்பது எனக்கு தெரியாது. அதே நேரம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளும் எண்ணம் எனக்கு எக்காலத்திலும் ஏற்பட்டதில்லை என்றார்

### புத்தாண்டுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்ந்தும் வேலைகளை முன்னெடுத்து செல்ல முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோக பூர்வமாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பிரதமரை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றத்தின்போது நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த கூட்டு செயற்குழு குறித்த பெயர்களை முன் மொழிந்த பின்னர் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

முக்கிய அமைச்சுப் பதவிகளுக்கு அனுபவம் வாய்ந்தவர்களை நியமிப்பதெனவும் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஏனைய அமைச்சுப் பதவிகளுக்கு நியமிப்பதெனவும் ஐ.தே.க தீர்மானித்துள்ளது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அமைச்சர்களாக புதிய முகங்களை நியமிக்கவுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தவர்களில் சிலரை அமைச்சர்களாக நியமிப்பதில்லையென தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, எஸ்.பி திஸநாயக்க, சமிந்த வீரக்கொடி, அநுரபிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேம ஜயந்த,செனவிரத்ன ஆகியோரே நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தவர்களாவர்.

இதேவேளை நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக்கட்சி அமைச்சர்களை அப்பதவியிலிருந்து நீக்குமாறு ஐ.தே.க எம்.பிக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஊடக பிரதானிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் அமைச்சரவை மாற்றியமைக்கப்படுமென்பதனை ஜனாதிபதி உறுதிப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### சம்பந்தன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்பவர், எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு மக்களின் நலன்களுக்காக செயற்பட வேண்டும். எனினும் நாட்டின் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஆளும் கட்சியில் அங்கம் வகிப்பவர் போல், அரசாங்கத்தின் தேவைகளை நிறைவேற்றி வருவது கேலிக்குரியது.

இதனால், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரை அந்த பதவியில் இருந்து நீக்கி விட்டு, கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு கூட்டு எதிர்க்கட்சி சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கின்றது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்தது.எதிர்காலத்தில் சர்வதேசம் வரை சென்று தகுதியான எதிர்க்கட்சித் தலைவரை நியமிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

### ஒப்பிரேஷன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையில்லா பிரேரணையில் இருந்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க தற்காலிகமாகவே தப்பித்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் 2015ம்ஆண்டிற்கு பின்னர் மறுக்கப்பட்டு வருகின்றது. என்ற விடயத்தினை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மீண்டும் நிரூபித்து விட்டனர். தேசிய அரசாங்கத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் பிரதிநிதிகள் அல்ல. அவர்கள் பிரதமரின் கைப்பாவை பொம்மைகள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க மகிந்த அணி தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கான மந்திராலோசனைகளில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற அந்தஸ்திலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆலோசனையை கேட்காமல் எதிர்ப்பை வெளியிட்டமை, ரணிலிடமிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக தலா 2 கோடி ரூபா பெற்றுக் கொடுத்ததாகக் கூறப்படும் விவகாரம், அரசின் அநீதியான திட்டங்களுக்கு எதிராக குரல் கொடுக்காமை உட்பட பல காரணங்களைக் காட்டி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளது என்று மகிந்த அணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்து சட்ட ஆலோசனைகளைப் பெறும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மண்ணெண்ணெய்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளன.

நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு அதனது நூறுநாள் செயற்றிட்டத்தில் லீற்றர் 74 ரூபாவுக்கு விற்கப்பட்ட மண்ணெண்ணெய் 44 ரூபாவுக்கு குறைக்கப்பட்டது.

தற்போது டீசல் வியாபாரம் குறைவடைந்துள்ளது. ஏனெனில் பேருந்துகளுக்கு மண்ணெண்ணெயே பயன்படுத்தப்படுகிறது. இதனால் மண்ணெண்ணெயின் கேள்வி கூடியுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### டக்ளஸ்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு அமைச்சு பதவிகள் கிடைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அவர்கள் அங்கம் வகிக்கின்ற நிலையில் அவர்களுக்கு பதவிகள் வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதிக்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### தோல்விக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், வாக்கெடுப்பில் கலந்துகொள்வதில்லை என கட்சி என்ற முறையில் நாங்கள் தீர்மானித்தோம்.

ஜனாதிபதி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மீது குற்றம் சுமத்தும் மகிந்த ராஜபக்ச, நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனையிலும் கையெழுத்திடவில்லை. அத்துடன் நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு எதிராக ஒரு வார்த்தையை கூட அவர் பேசவில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்த உண்மையான காரணம் பிரதமரை பதவியில் இருந்து நீக்குவது அல்ல, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுவிழக்க செய்வதே நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### ஜே.வி.பி.யுடன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஜே.வி.பி தனது ஆதரவை தெரிவித்திருந்தது. எனினும் இந்த ஆதரவு கூட்டு எதிர்க்கட்சிக்கு ஆதரவளிப்பதாக அமையாது என ஜே.வி.பி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அரசிலிருந்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடப்படவுள்ளது. அத்துடன் தமது அமைச்சுப் பதவியிலிருந்து விலகிக் கட்சியை வலுவானதாக மாற்றியமைக்க எடுக்கவுள்ள நடவடிக்கை தொடர்பிலான திட்டத்தை இந்த 16 பேரும் மத்தியகுழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாதகமான பதிலை வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 5 ஆம் திகதி இரவு பிரதமருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொடர்ந்தும் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதா இல்லையா என்பது குறித்து கட்சியின் மத்திய செயற்குழுவை கூட்டி தீர்மானிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், இன்று நடைபெறும் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்ற திட்டமிடுள்ளதாக தெரியவருகிறது.

தயாசிறி ஜயசேகர, எஸ்.பி. திஸாநாயக்க, சுசில் பிரேம ஜயந்த, அனுரபிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி,ஜோன் செனவிரத்ன ஆகிய 6 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர்.

இவர்களை தவிர இராஜாங்க அமைச்சர்கள் டிலான் பெரேரா, டி.பி. ஏக்கநாயக்க, லக்ஷ்மன் யாப்ப அபேவர்தன, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, பிரதியமைச்சர்களான சுசந்த புஞ்சிநிலமே, அனுருத்த ஜயரத்ன, சுமேதா ஜீ. ஜயசேன, லக்ஷ்மன் வசந்த, தாராநாத் பஸ்நாயக்க மற்றும் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோர் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரசாயனத் தாக்குதல் சிரியாவில் 70 பேர் சாவு

## மறுக்கிறது அரசு

டமஸ்கஸ், ஏப்.09

சிரியாவின் கிழக்கு கூட்டா பகுதியில், கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கடைசி நகரமான டூமாவில் நடத்தப்பட்ட நச்சு வாயுத் தாக்குதலில் குறைந்தது 70 பேர் உயிரிழந்ததாக மீட்புக் குழுவினர் மற்றும் மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ருவீட் செய்துள்ள தன்னார்வ மீட்பு படையினரான "தி வைட் ஹெல்மட்ஸ்" குழு, கட்டடத்தின் அடிதளத்தில் பல சடலங்கள் உள்ள புகைப்படங்களைப் பகிர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஆனால், இந்த அறிக்கைகள் இன்னும் தனிப்பட்ட முறையில் சரிபார்க்கப்படவில்லை.

இரசாயனத் தாக்குதல் நடத்தியதாக தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள சிரிய அரசு, அவை 'சோடிக்கப்பட்டவை' என்று தெரிவித்துள்ளது.


அறிக்கைகளைக் கண்காணித்து வரும் அமெரிக்க அரசுத்துறை, தாக்குதல்களில் இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டு இருந்தால், சிரிய அரசுடன் இணைந்து போராடும் ரஷ்யாதான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறியுள்ளது.

வாயுத் தாக்குதல் நடைபெற்றதாக கூறப்படும் நிலையில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூட்டா ஊடக மையம் ருவிட்டரில் பதிவிட்டுள்ளது.

ஹெலிகொப்டர் மூலம் வீசப்பட்டதாகக் கூறப்படும் உருளைக் குண்டில் 'சரின்' எனப்படும் நச்சு இருந்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



## கார்த்திக் படத்தில் தனுஷ்



சென்னை, ஏப்.09

கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தனுஷ் நடிக்க இருக்கும் படத்தை சஷிகாந்த் தயாரிக்கவுள்ளார்.

'இறைவி' படத்துக்குப் பிறகு கார்த்திக் சுப்புராஜ் இயக்கும் படத்தில் நடிப்பதாக ஒப்புக் கொண்டார் தனுஷ். இந்தப் படத்தை ஸ்ரீ தேனாண்டாள் ஃபிலிம்ஸ் தயாரிப்பதாக இருந்தது. ஆனால், தனுஷின் அடுத்தடுத்த வேலைப் பளுவால் சொன்னபடி கார்த்திக் சுப்புராஜுக்கு கால்ஷீட் கொடுக்க முடியவில்லை. எனவே, பிரபுதேவாவை வைத்து 'மெர்க்குரி' படத்தை இயக்கினார் கார்த்திக் சுப்புராஜ்.

இந்நிலையில், ரஜினிகாந்த் நடிப்பில் ஒரு படத்தை இயக்கும் வாய்ப்பு கார்த்திக் சுப்புராஜுக்கு கிடைத்திருக்கிறது. சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார்.

ரஜினி படத்துக்குப் பிறகு தனுஷ் நடிக்கும் படத்தை இயக்கப் போகிறார் கார்த்திக் சுப்புராஜ். பண நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ஸ்ரீ தேனாண்டாள் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் இருந்து விலகிக்கொள்ள, 'விக்ரம் வேதா' படத்தைத் தயாரித்த சஷிகாந்த் தன்னுடைய வை நொட் ஸ்டுடியோஸ் சார்பில் தயாரிக்கவுள்ளார். (அ)

## காவிரி நீருக்காக நடிகர்கள் போராட்டம்



சென்னை, ஏப்.09

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி தமிழ்த் திரையுலகினர் மௌனப் போராட்டம் ஒன்றை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று நடத்தினர். இதில் முன்னணி நடிகர்கள், நடிகைகள் பங்கேற்றனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட காலக்கெடுவுக்குள் அதை அமைக்காமல் மீண்டும் உச்ச நீதிமன்றம் சென்ற மத்திய அரசைக் கண்டித்தும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரியும் தமிழகம் முழுவதும் போராட்டம் வலுத்து வருகிறது.

அதிமுக, பாஜக தவிர எதிர்க்கட்சிகள் ஓரணியில் நின்று போராட்டம் நடத்துகின்றன. இந்த நிலையில், திரையுலகினரும் தங்கள் எதிர்ப்பைக் காட்ட நேற்றுக் காலை 9 மணிமுதல் 1 மணிவரை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மௌனப் போராட்டத்தை முன்னெடுத்தனர். நடிகர் சங்கம் சார்பில் நடைபெறும் போராட்டத்தில் பெப்சி அமைப்பினரும் கலந்துகொண்டனர்.

முன்னணி நடிகர்களான ரஜினி, கமல், விஜய், சூர்யா, தனுஷ், சிவகார்த்திகேயன், பிரசாந்த், சத்யராஜ், இயக்குநர் ஆர்.கே. செல்வமணி, மக்கள் நீதி மய்ய உயர்மட்டக் குழு உறுப்பினர் ஸ்ரீபிரியா, இசையமைப்பாளர் சங்கர் கணேஷ், எஸ்.ஏ.சந்திரசேகர், பார்த்திபன் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (அ)

## உயிர்மீனை விழுங்கிய குழந்தை தப்பியது!

பெங்களூர், ஏப். 09

இந்தியாவின், பெங்களூரில் உயிருள்ள மீனை விழுங்கிய 11 மாதக் குழந்தையை மருத்துவர்கள் போராடிக் காப்பாற்றி உள்ளனர்.

பெங்களூரைச் சேர்ந்த ஒருவரின் 11 மாத ஆண் குழந்தை வீட்டில் தவழ்ந்து விளையாடியபோது மீன் தொட்டியில் நீந்தி கொண்டிருந்த சிறிய மீனை எடுத்து வாயில் விழுங்கியது. மீன் குழந்தையின் தொண்டையில் சிக்கிக் கொண்டது.

இதனால் குழந்தையின் வாயில் இருந்து இரத்தம் வழிந்தது. மூச்சு விடவும் குழந்தை சிரமப்பட்டது. உடனே குழந்தையை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

மருத்துவர்கள் சோதித்த போது குழந்தையின் தொண்டையில் இருந்த மீன் வயிற்றுக்குள் சென்று உயிருடன் துடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. உடனே குழந்தையைத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தனர்.

குழந்தையைக் காப்பாற்ற மீனை வெளியே எடுக்க எந்த மாதிரியான சிகிச்சை அளிக்கலாம் என மருத்துவர்கள் ஆலோசித்தனர். பின்னர் என்டோஸ் கோபி மூலம் வயிற்றில் உயிருடன் இருந்த மீனை இரண்டாக வெட்டி வெளியே எடுத்தனர். இதனால் குழந்தை உயிர் பிழைத்தது. (அ)

## ட்ரம்ப்பின் கட்டடத்தில் திடீரெனப் பரவிய 'தீ'!

நியூயோர்க், ஏப்.09

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ட்ரம்ப் ரவரின் 50 ஆவது மாடியில் நேற்று முன்தினம் மாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்புக்கு நியூயோர்க் நகரில் உள்ள மன்ஹாட்டன் பகுதியில் 58 மாடிகள் கொண்ட பிரமாண்ட கட்டடம் உள்ளது. இதில் மேற்பரப்பில் உள்ள 3 அடுக்குகளை தனது வீடாக மாற்றி அவர் வசித்து வருகிறார். ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், ட்ரம்ப் பெரும்பாலும் வொஷிங்டன் நகரில் வசித்து வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை உள்ளூர் நேரப்படி சுமார் 5.30 மணியளவில் ட்ரம்ப் ரவரின் 50 ஆவது மாடியில் திடீரெனத் தீ பற்றியது. அங்கு பிடித்த தீ மளமளவெனப் பரவியது.

தகவலறிந்து அங்கு ஐந்துக்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்தன. சுமார் 140 க்கும் மேற்பட்ட வீரர்கள் போராடித் தீயை அணைத்தனர். இந்தத் தீ விபத்தில் சிக்கிய ஒருவர் படுகாயம் அடைந்து உயிருக்குப் போராடி வருகின்றார்.

ட்ரம்ப் ரவரில் ஏற்பட்ட தீயை போராடி அணைத்த தீயணைப்பு படை வீரர்களுக்கு ட்ரம்ப் ருவிட்டரில் நன்றி தெரிவித்துப் பதிவிட்டுள்ளார். (அ)



## கனடா பஸ் விபத்தில் ஹொக்கி வீரர்கள் பலி ட்ரம்ப் இரங்கல்

வொஷிங்டன், ஏப்.09

கனடாவில் நடந்த பஸ் விபத்தில் சிக்கி ஐஸ் ஹொக்கி வீரர்கள் 14 பேர் பலியாகியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் பலியான வீரர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கனடா நாட்டில் உள்ளூர் ஐஸ் ஹொக்கிப் போட்டியில் விளையாடுவதற்காக ஜூனியர் அணி வீரர்கள் பஸ்ஸில் சென்றனர். சாஸ்கட்சேவான் மாகாணத்தின் திஸ்டேல் நகருக்கு அருகில் பஸ் சென்றபோது எதிரே வந்த டிரக்குடன் அது மோதியது. இந்த விபத்தில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

## ராகுல் தாக்க, நாயர் காக்க

# மிரட்டியது பஞ்சாப்!



சண்டிகர், ஏப். 09

ராகுல் வெளுத்து வாங்க, நாயர் விக்கெட்டைக் காத்து ஆட டில்லியை வீழ்த்தியது பஞ்சாப்.

11ஆவது ஐ.பி.எல். தொடரின் 2ஆவது நாளான நேற்று, சண்டிகரில் உள்ள ஐ.எஸ். பிந்த்ரா மைதானத்தில் டில்லி டேர்டெவில்ஸ் அணியை எதிர்த்து அஸ்வின் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி, கொலின் முன்றோ (4), ஷ்ரேயாஸ் அய்யர் (11), விஜய் சங்கர் (13) ஆகியோரை அடுத்தடுத்துப் பறிகொடுத்தது.

அடுத்து வந்த ரிஷப் புந்த் அதிரடியாக விளையாடி 13 பந்துகளில் 28 ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றார். மறுமுனையில் அரைச்சதம் (55) அடித்த கையோடு கம்பீர் ஆட்டமிழந்தார்.

கடைசிவரை களத்தில் நின்ற கிறிஸ் மோரிஸ் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களைச் சேர்க்க டில்லி அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 167 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் கேஎல் ராகுல், மயாங்க் அகர்வால் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ராகுல் அதிரடியாக விளையாடி 14 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். இவரது அதிரடியால் பஞ்சாப் அணி 2.5 ஓவர்களில் 50 ஓட்டங்களைத்தொட்டது.

அரைச்சதம் அடித்த ராகுல் 16 பந்துகளில் 6 பௌண்டரிகள், 4 சிக்சர்களுடன் 51 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து அகர்வால் (7), யுவராஜ் சிங் (12) ஆகியோர் ஏமாற்றமளித்தனர். ஆனால் 4ஆவது வீரராக களம் இறங்கிய கருண் நாயர், விக்கெட் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தி நிதானமாக ஆடி 33 பந்துகளில் 50 ஓட்டங்களைச் சேர்த்தார்.

ராகுல் மற்றும் நாயர் ஆகியோரின் சிறப்பான அரைச்சதங்களால் ஏனைய வீரர்கள் நிதானமாக விளையாடினார்கள். 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த டேவிட் மில்லர் - மார்கஸ் ஸ்டாய்னிஸ் ஜோடி, அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் 18.5 ஓவர்களில் 167 ஓட்டங்களைச் சேர்த்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ஐ)

**ஐ.பி.எல். இன்றைய போட்டி**
**ஹைதராபாத் சன்ரைஸர்ஸ்**
**எதிர்**
**ராஜஸ்தான் றோயல்ஸ்**
**(இரவு 8 மணி)**

## மேற்கிந்திய டெஸ்ட் தொடரிலிருந்து துஸ்மந்த சமீர அவுட்



கொழும்பு, ஏப். 09

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் துஸ்மந்த சமீர காயம் காரணமாக மேற்கிந்திய அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கொழும்பில் நடைபெற்றுவரும் உள்ளூர் நான்கு அணிகளுக்கு எதிரான போட்டியில் காயமடைந்த சமீர மீளவும் விளையாடவில்லை.


சமீரவின் காயம் காரணமாக மேற்கிந்தியாவுடனான முதலாவது டெஸ்டில் அவர் பங்கேற்க மாட்டாரென தேர்வுக்குழுத் தலைவர் கிரகாம் லா புரோய் தெரிவித்தார்.

இவர் ஐ.பி.எல்.இல் பங்கேற்க இருந்த போதிலும் 'அவரது காயம் காரணமாக பங்கேற்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே துடுப்பாட்டவீரரான தனுஷ்க குணதிலக தொடை எலும்பில் ஏற்பட்ட காயம் காரணமாக மூன்று வாரம் ஓய்வில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியாவுடன் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை விளையாடவுள்ளது. முதலாவது டெஸ்ட் எதிர்வரும் யூன் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## வீறுகொண்டெழுந்தார் போக்பா
## பணிந்தது மான்செஸ்டர் சிட்டி



மான்செஸ்டர் ஏப். 09

இங்கிலீஷ் பிறீமியர் லீக்கில் போக்பாவின் சிறப்பான ஆட்டத்தால் மான்செஸ்டர் சிட்டியை 3-2 என வீழ்த்தியது மான்செஸ்டர் யுனைடெட்.


இங்கிலீஷ் பிறீமியர் லீக் கால்பந்து தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் மான்செஸ்டர் சிட்டி - மான்செஸ்டர் யுனைடெட் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த போட்டியில் வெற்றி பெற்றால் சம்பியன் பட்டத்தை உறுதி செய்துவிடும் என்பதால் மான்செஸ்டர் சிட்டி அணி வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் களம் இறங்கியது.

சொந்த மண்ணில் விளையாடிய மான்செஸ்டர் சிட்டி முதல் பாதி நேரத்தில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அந்த அணியின் வின்சென்ட் கொம்பானி 25-வது நிமிடத்திலும், குண்டோகன் 30-வது நிமிடத்திலும் கோல் அடித்தனர். இதனால் முதல் பாதி நேரத்தில் மான்செஸ்டர் சிட்டி 2-0 என முன்னிலை பெற்றது.

2-வது பாதி நேரத்தில் மான்செஸ்டர் யுனைடெட் வீறுகொண்டு எழுந்தது. 53ஆவது மற்றும் 55ஆவது நிமிடத்தில் அடுத்தடுத்து போக்பா கோல் அடித்து அசத்தினார். 69ஆவது நிமிடத்தில் கிறிஸ் ஸ்மாலிங் மேலும் ஒரு கோல் அடித்தார். இதனால் மான்செஸ்டர் யுனைடெட் 3-2 என வெற்றி பெற்றது.

தற்போதைய சூழ்நிலையில் மான்செஸ்டர் சிட்டி 84 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், மான்செஸ்டர் யுனைடெட் 71 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், லிவர்பூல் 67 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளது.

## ஆடியது கொல்கத்தா அடங்கியது பெங்களூர்



கொல்கத்தா, ஏப்.09

சுனில் நரேனின் அதிரடி கைகொடுக்க, பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸை 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கும், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்கும் இடையிலான போட்டி ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய கொல்கத்தா அணித்தலைவர் தினேஷ் கார்த்திக் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனால் பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக குயின்டான் டி கொக், மெக்கல்லம் ஆகியோர் களமிறங்கினர். டி கொக் 4 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த நிலையில் பியூஸ் சாவ்லா பந்தில் ஆட்டமிழந்தார். அதன்பின் அணித்தலைவர் விராட் கோஹ்லி, மெக்கலமுடன் இணைந்து நிதானமாக ஓட்டங்களைக் குவித்தார். மறுமுனையில் அதிரடியாக ஆடி, 27 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்த மெக்கலம் நரேன் பந்தில் போல்டாகி வெளியேறினார்

அவரைத்தொடர்ந்து களமிறங்கிய டி வில்லியர்ஸும் அதிரடியில் இறங்கினார். அவர் 23 பந்துகளில் ஐந்து சிக்ஸர் மற்றும் ஒரு பவுண்டரியுடன் 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதற்கு அடுத்த பந்திலேயே விராட் கோஹ்லியும் 31 ஓட்டங்களோடு, நிதிஷ் ராணா பந்தில் போல்டானார்.

இறுதியில் மந்தீப் சிங் அதிரடியாக விளையாடி 18 பந்தில் 37 ஓட்டங்கள் எடுக்க, பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்கள் குவித்தது. கொல்கத்தா அணியின் பந்துவீச்சில் வினய் குமார், நிதிஷ் ராணா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இலக்காக பெங்களூர் அணி நிர்ணயித்த 177 எனும் வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு சுனில்நரேனும், கிறிஸ் லைனும் நீண்ட இணைப்பாட்டத்தை கொடுக்க முடியவில்லை. கிறிஸ் லைன் 5 ஓட்டங்களோடு வோக்ஸின் பந்தில் வில்லியர்ஸிடம்பிடிகொடுத்து வீழ்ந்தார். ஆனால் கொஞ்சமும் அசராமல் துடுப்பைச் சுழற்றிய சுனில் நரேன் ருத்ரதாண்டவம் ஆடி, 19 பந்துகளில் 5 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 50 ஓட்டங்களை விளாசிய பின்னர், உமேஷ் யாதவின் பந்தில் பிடிகொடுத்து வெளியேறினார். அதன் பின்னர் உத்தப்பாவும் 13 ஓட்டங்களோடு நடையைக் கட்டினார். பின்னர் இணைந்த ராணாவும், அணித்தலைவர் தினேஷ் கார்த்திக்கும் நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தனர். போகப் போக இருவரின் ஆட்டத்திலும் அனல் பறக்கத் தொடங்கியது. அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய ராணா 34 ஓட்டங்களில், வாஷிங்டன் சுந்தரின் பந்தில், எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய ரிங்கு, 6 ஓட்டங்களோடு வீழ்த்தப்பட்டார். தினேஷ் கார்த்திக்கோடு பின்னர் இணைந்து கொண்டார் அன்ட்ரூ ரஸல். ஆனால் அதிரடி காட்ட முற்பட்டு 15 ஓட்டங்களோடு ரஸலும் ஆட்டமிழந்தார். ஆயினும் தினேஸ் கார்த்திக் வழக்கம்போல, ஆட்டத்தை வெற்றிகரமாக பவுண்டரி அடித்து முடித்து வைத்தார். அவர் 35 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காதிருந்தார். பெங்களூர் அணி சார்பில் கிறிஸ் வோக்ஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 09.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.